[27th March 1969

கட்டணச் சலுகை.

திரு. எம். அய்யாசாமி : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அரசிதழ் பதிவு பெருத ஊழியர்களின் மகன் அல்லது மகளுக்கு புகுமுக வகுப்பில் கட்டணச் சலுகை அளிப்பதற்கு என்ன முறை கையாளப்படுகிறது ?

(இ) அரசிதழ் பதிவு பெருத ஊழியர் அத்தாட்சியைக் கல்லூரியில் சமர்ப்பிக்கும் தேதிக்குப் பிந்திய நாட்கள் மட்டும் தான் கட்டணச் சலுகை அளிக்கப்படுகிறது என்பது உண்மையா ?

(உ) ஆம் எனில், அதற்குக் காரணமென்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இந்தச் சலுகையைக் கோருகின்ற மாணவரின் பெற்ருேர் வாங்கும் சம்பளம், வகிக்கும் பதவி பற்றிய சான்றிதழை, மேற்கூறப்பட்ட கட்டணச் சலுகை வழங்கப்படுவதற்கு முன் சம்பந்தப்பட்ட துறை அல்லது அலுவலகத் தலைவரிடமிருந்து வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று சலுகை வழங்கும் அதிகாரிகளால் வற்புறுத்தப் படுகிறது.

(இ), (உ) வேலைச் சான்றிதழ் கொடுக்கப்பட்ட தேதியைப் பொருட் படுத்தாமல், அச்சான்றிதழ் கல்லூரியில் எந்த நீடிருக்கைப் பருவத்தில் **(term)** கொடுக்கப்பட்டதோ அந்தப் பருவத்தின் தொடக்கத்திலிருந்து மட்டுமே இந்தக் கட்டணச் சலுகை வழங்கப்படுகிறது. இந்த நடைமுறை தமிழ் நாடு கல்வி விதிகள், **92**-வது விதியின் கீழ் வழங்கப்பட்டுள்ள கட்டணச் சலுகைகள், மற்றும் பிற சலுகைகள் குறித்த நடைமுறையை ஒட்டியதாகவே உள்ளது. எனினும், **1967–68**-ம் ஆண்டைப் பொறுத்த வரையில் கல்லூரியின் இரண்டாவது அல்லது மூன்ருவது நீடிருக்கைப் பருவத்தின் சான்றிதழ்கள் கொடுக்கப்பட்டிருந்தும் கூட, கட்டணச் சலுகையை அரசு, ஒரு சிறப்பு தேர்வாக, ஆண்டு முழுவதற்கும் அளிக்க ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

திரு. எம். அய்யாசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே பணத்தைக் கட்டிக் கல்லூரியில் சேர்ந்த பொழுதும் கூட, பின்னல் சான்றிதழ் கொண்டு வந்து கொடுத்த பிறகு ஆண்டு முழுவதற்கும் இலவசமாக அனுமதிப்பது கல்லூரிகளில் வழக்கமாக இருந்தது. சென்ற ஆண்டு அரசிதழ் பதிவு பெருத அலுவலர் ஒருவர் தன் குழந்தைக்கு ஏற்கனவே கட்டிய பணத்திற்கு சான்றிதழ் கொண்டு வந்து கொடுத்த பிறகும் அதற்குப் பின்னே தான் சலுகை வழங்கப்படும் என்று கூறப்பட்டது. அதற்கு முன்னல் சலுகை இல்லை என்று கூறினர்கள். அந்த நிலை தான் இன்னும் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பி.யு.சி. வகுப்பு இப்போது எல்லோருக்கும் இலவசமாக வந்துவிட்டது. முன்னல் இருந்ததைப்பற்றி பிரச்சனையில்லை. அப்படி தவறு நடந்திருப்பதாகத் தனிப்பட்ட கோரிக்கை வந்தால், அரசாங்கம் அதைப் பரிசீலிக்கலாம்.

New Court Buildings at Madurai

*252 *Q*.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the stage at which the construction of new Court buildings at Madurai now stands ; and

(*b*) whether any provision is being made for Advocates' Chambers also in the new buildings ?

27th March 1969]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) கட்டிடத்தின் கீழ்த்தள வேலைகள் எல்லாம் முடிவடைந்துவிட்டன. முதல் மாடிப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேறி வருகின்றன. இது சம்பந்தப் பட்ட எல்லா வேலைகளும் 30—9—1969-க்குள் முடிக்கப்பட வேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) புதிய கட்டிடத்தில் வழக்குரைஞர் அறை கட்டும் ஏற்பாடு எதுவும் இல்லை.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, வழக்கறிஞர்கள் அறைகள் இருக்க வேண்டியதுதான். அத்துடன் பொதுமக்களுக்கும் இடவசதி வேண்டும். இப்போது தமுக்கம் மைதானத்தில் ஊருக்கு ரொம்ப தூரத்தில் அது இருப்பதால் வசதிகள் எதுவும் இல்லாமல் இருக்கிறது. மேலூர்–திருப்பத்தூர் ரோடில் இருக்கிறது. கட்சிக்காரர்கள் போகும்போது அவர்கள் தங்குவதற்கும் கேன்டீன் வசதி போன்றவை இல்லாமல் இருக்கிறது. அதற்கான கட்டிடம் கட்ட ஏதாவது திட்டம் போடப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாஷா : நீதி மன்றக் கட்டிடத்திற்கான குறிப்பு இருக்கிறது. கேன்டீன் வைப்பதற்கு வழக்கறிஞர்கள் ஏற்பாடு செய்வார்கள். நீதிபதிகள் அதைக் கவனிப்பார்கள்.

திரு. வி. தங்கபாண்டியன் : இப்போது கட்டப்படுகிற புதிய நீதி மன்றக் கட்டிடம் ராமநாதபுரம் மாவட்டத்திற்கும் சேர்த்துக் கட்டப்படுகிறதா ? ராமநாதபுரத்திற்குத் தனித் தலைநகரம் ஏற்பட்டுவிட்டால் அங்கே மீண்டும் கட்டிடம் கட்டப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாஷா : தனித் தலைநகரம் ஏற்படும் போது அதைக் கவனிக்கலாம்.

Staff Quarters near dam sites.

***253 Q.—Thiru R. KRISHNASWAMY NAIDU (on behalf of Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state the present use of the buildings constructed originally as staff quarters etc., in the areas of the Periyar Lower Camp, the Manimuthar Dam, the Vaigai Dam, the Vidur Dam, the Krishnagiri Anicut, the Sathanur Dam, the Amaravathi Dam and the Bhavani Dam in Coimbatore district ?**

அணைக்கட்டு அருகில் உள்ள குடியிருப்புகள்.

திரு. ஆர். கிருஷ்ணசுவாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்) : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

கோவை பவானி அணைக்கட்டு, அமராவதி அணைக்கட்டு, சாத்தனூர் அணைக்கட்டு, கிருஷ்ணகிரி அணைக்கட்டு, வீடூர் அணை, வைகை அணை, மணிமுத்தாறு அணை, பெரியாறு லோயர் காம்ப் ஆகிய பகுதிகளில் முதலில் பணியாளர்கள் குடியிருப்பு போன்றவைகளுக்குக் கட்டிய கட்டிடங்கள், தற்போது என்ன உபயோகத்தில் இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : மேலவை முன் விவர அறிக்கை a ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

---

a Printed as Appendix IV on pages 138–139